மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 38/2023 |
| பெயர் | : | செல்வம் (PW2) |
| த/பெ | : | நடராஜன் |

(Accuse Luca is present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th day of December 2023

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** ( மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை)( சாட்சிக்கு அவரது முதல் விசாரணை படித்துக் காண்பிக்கப்பட்டது)

1) நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் போலிசார் விசாரணையிலும் தெரிவித்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தின் இடது பக்கத்திலோ, வலது பக்கத்திலோ கட்டிடங்கள் கிடையாது என்றால் பல்க் சற்று தள்ளி இருந்தது.விபத்து நடந்த இடத்தில் எந்தவொரு வெளிச்சமோ, மின் கம்பமோ கிடையாது என்றால் சரிதான்.

2) விபத்து நடந்த போது நாங்கள் லாரியின் பின்னால் வந்து கொண்டிருந்தோமா என்றால் சரிதான், எங்களை ஓவர் டேக் செய்து முன்னால் சென்று விட்டது. லாரிக்கு பின்னால் நாங்கள் சென்றதால் லாரிக்கு முன்னால் என்ன நடந்தது என்று தெரியாது என்றால் எங்களை ஓவர் டேக் செய்து லாரி முன்னால் சென்றது முத்துக்குமார் சைடில் தான் சென்று கொண்டிருந்தார் அதனால் இடித்ததை நாங்கள் பார்த்தோம்.

3) விபத்து நடந்த உடன் முத்துக்குமார் ரோட்டில் தான் விழுந்தார் என்றால் சரிதான். ரோட்டில் விழுந்தவரை நாங்கள் சென்று பார்த்த போது அவர் இறந்து இருந்தார் என்றால் சரிதான்.விபத்து சம்பந்தமாக புகார் கொடுக்கும் போது நான் அ.சா.1 மாரிமுத்துவுடன் கூட இருந்தேன் என்றால் சரிதான். அந்த புகார் மனுவில் நான் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். தூத்துக்குடி மருத்துவமனையில் வைத்து தான் அந்த கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.,

4) நான் சொல்வது உண்மையில்லை என்றாலும் கக்கரம்பட்டியில் விசேஷத்திற்கு சென்று மது அருந்தியிருந்ததால் பதற்றத்தில் ஏற்பட்டது தான் இந்த விபத்து என்றாலும் அதற்கும் லாரி ஓட்டுநருக்கும் சம்பந்தம் கிடையாது என்றாலும் சரியல்ல. நான் வந்த பைக்கை அசா.1 ஓட்டினார்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.